# நெல்லிக்குப்பம் நகராட்சி

## நகர் மன்றக் கூட்டம் நிகழ்ச்சி நிரல்

2018–ம் ஆண்டு அக்டோபர் மாதம் 30–ம் தேதி செவ்வாய்க்கிழமை மாலை 5.00 மணிக்கு நெல்லிக்குப்பம் நகராட்சி ஆணையர் அறையில் நடைபெற உள்ள நகர் மன்றத்தின் அவசரக் கூட்டத்தில் முடிவு செய்யப்படவுள்ள மன்றப்பொருள்கள் விபரம்.

முன்னிலை : – திரு. எஸ்.மகாராஜன்
தனி அலுவலர்,
நெல்லிக்குப்பம் நகராட்சி.

**மன்றபொருள்.1.** நெல்லிக்குப்பம் நகராட்சிக்கு சொந்தமான கழிவு செய்யப்பட் ஈப்பு வாகனம்TN-31/ C 4019 ( Comm Jeep 1999 Model Mahendra ) 16.10.2018 அன்று பொது ஏலம் விடப்பட்டதில் பொறியியல் பிரிவு ஏல பதிவேட்டின் படி ( பக்கம் எண் . 27 முதல் 30 வரை ) 17 நபர்கள் கலந்து கொண்டார்கள் . அரசு மதிப்பீட்டின் படி ஏலக்கேள்வி கேட்கப்பட்டது . இறுதியாக உயர்ந்த பட்ச கேள்வி கேட்ட “ சென்னை ஆட்டோ ஸ்பேர்ஸ் “ , 53–56 , திண்டிவனம் – பாண்டி மெயின் ரோடு , பாலாஜி நகர் , பாட்டனூர் ( ரூ . 34000/– மற்றும் GST 18% ) அவர்களுக்கு ஏலம் விடப்பட்டது . அலுவலக கருவூலத்தில் ரூ . 34000/– அன்றே செலுத்தப்பட்டுவிட்டது . மீதத் தொகை GST 18% ஆணையாளர் , நெல்லிக்குப்பம் நகராட்சி என்ற பெயரில் 26.10.2018 அன்று செலுத்தப்பட்டுள்ளது . எனவே “ சென்னை ஆட்டோ ஸ்பேர்ஸ் “ அவர்களுக்கு செயல்முறை உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–** 1 . ஏலத் தொகை ரூபாய் 34000/– மற்றும் GST (18% ) ரூபாய் 6120/– ஆக கூடுதல் ரூபாய் 40120/– அரசு நிர்ணயித்த விலை ரூபாய் 32000/–ஐ விட கூடுதலாக உள்ளதாலும் மேலும் மறு ஏலம் விடும் பட்சத்தில் இதைவிட கூடுதல் ஏலத் தொகை கேட்பதற்கான வாய்ப்பு இல்லாத காரணத்தாலும் உயர்ந்த பட்ச ஏலத்தொகையை மன்றம் அனுமதிக்கலாம் .

2.இருப்பு பதிவேட்டிலிருந்து இவ்வாகனத்தை நீக்கம் செய்யவும் அனுமதிக்கலாம்

(ந.க.எண் 2269/2018/இ1)

**தீர்மான எண் : 230 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது. மேலும் இருப்பு பதிவேட்டிலிருந்து சம்மந்தப்பட்ட வாகனத்தை நீக்கம் செய்யவும் அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள்.2.** நெல்லிக்குப்பம் நகராட்சிக்கு சொந்தமான கழிவு செய்யப்பட் டிப்பர் லாரி 709 TN-31/ B 0834 ( 1997 Model Tata 709 ) வாகனம் 16.10.2018 அன்று பொது ஏலம் விடப்பட்டதில் பொறியியல் பிரிவு ஏல பதிவேட்டின் படி ( பக்கம் எண் . 30 முதல் 38 வரை ) 16 நபர்கள் கலந்து கொண்டார்கள் . அரசு மதிப்பீட்டின் படி ஏலக்கேள்வி கேட்கப்பட்டது . இறுதியாக உயர்ந்த பட்ச கேள்வி கேட்ட “ சென்னை ஆட்டோ ஸ்பேர்ஸ் “ , 53–56 , திண்டிவனம் – பாண்டி மெயின் ரோடு , பாலாஜி நகர் , பாட்டனூர் ( ரூ . 79000/– மற்றும் GST 18% ) அவர்களுக்கு ஏலம் விடப்பட்டது . அலுவலக கருவூலத்தில் ரூ . 79000/– அன்றே செலுத்தப்பட்டுவிட்டது . மீதத் தொகை GST 18% ஆணையாளர் , நெல்லிக்குப்பம் நகராட்சி என்ற பெயரில் 26.10.2018 அன்று செலுத்தப்பட்டுள்ளது . எனவே “ சென்னை ஆட்டோ ஸ்பேர்ஸ் “ அவர்களுக்கு செயல்முறை உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–** 1 . ஏலத் தொகை ரூபாய் 79000/– மற்றும் GST (18% ) ரூபாய் 14220/– ஆக கூடுதல் ரூபாய் 93220/– அரசு நிர்ணயித்த விலை ரூபாய் 83300/–ஐ விட கூடுதலாக உள்ளதாலும் மேலும் மறு ஏலம் விடும் பட்சத்தில் இதைவிட கூடுதல் ஏலத் தொகை கேட்பதற்கான வாய்ப்பு இல்லாத காரணத்தாலும் உயர்ந்த பட்ச ஏலத்தொகையை மன்றம் அனுமதிக்கலாம் .

2. இருப்பு பதிவேட்டிலிருந்து இவ்வாகனத்தை நீக்கம் செய்யவும் அனுமதிக்கலாம்

(ந.க.எண் 3706/2017/எச்1)

**தீர்மான எண் : 231 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது. மேலும் இருப்பு பதிவேட்டிலிருந்து சம்மந்தப்பட்ட வாகனத்தை நீக்கம் செய்யவும் அனுமதிக்கப்பட்டது .**

**<u>மன்றபொருள்.3.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சியில் துப்பரவு பணியாளர்களாக தொகுப்பூதியத்தில் பணிப்புரிந்து பின்னர் காலமுறை ஊதியத்தில் பணியமர்த்தப்பட்ட 12 துப்பரவு பணியாளர்கள் தங்கள் பணியில் சேர்ந்த நாள் முதல் முன்தேதியிட்டு காலமுறை ஊதியத்தில் பணியமர்த்தி அதற்குண்டான பணபலன்களைவழங்க வேண்டு என சென்னை உயர்நீதிமன்றத்தில் (வழக்கு எண் WP No.12738/2012/பி1, MP No.1/2012) வழக்கு தொடர்ந்ததின் அடிப்படையில் வரப்பெற்ற சென்னை உயர்நீதி மன்ற தீர்ப்பின் அடிப்படையிலும், சென்னை அரசு வழக்கறிஞர், நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை மற்றும் உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கை கடலூர் ஆகியோர்களின் தெளிவுரை மற்றும் கருத்துரைகளின் அடிப்படையில், இந்நகராட்சியில் பணிப்புரியும் 12 துப்பரவு பணியாளர்களை அவரவர் தொகுப்பூத்தியத்தில் பணியில் அமர்த்தப்பட்ட நாளிலிருந்து ஊதியம் நிர்ணயம் கணக்கீட்டு முன்தேதியிட்டு காலமுறை ஊதியத்தில் பணியமர்த்திடவும் இந்நகராட்சி ஆணையர் அவர்களின் 23.05.2013 தேதிய செயல்முறை உத்திரவிடப்பட்டுள்ளது. அரசாணை எண் 166 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர்வழங்கல்(எம்,இ,3)துறை நாள் 31.12.2014 ல் தொகுப்பூதியத்தில் இருந்து காலமுறை ஊதியத்திற்கு முன்தேதியிட்டு பணி நிரந்தரம் செய்யப்பட்டது செல்லாது என அறிவுறுத்தப்பட்டுள்ளதின் அடிப்படையில் அரசாணை எண் 101 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 30.04.1997 மற்றும் அரசாணை எண் 71 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 05.05.1998 ன் படி தொகுப்பூதியத்தில் நியமனம் செய்யப்பட்டு 3 ஆண்டு பணிக்காலம் கணக்கிட்டு திரளும் நாள் முதல் இப்பணியாளர்களின் பணி வரன்முறைப்படுத்தப்பட்டதை ஏற்க இயலாதென்றும் 23.02.2006 முதலே இப்பணியாளர்களி. பணி வரன்முறைப்படுத்தப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன் அடிப்படையிலும், 2013–14 ஆண்டு தணிக்கைத் தடை பத்தி எண் 31, 2014–15 ம் ஆண்டு தணிக்கைத்தடை பத்தி எண்46 மற்றும் 2015–16ம் ஆண்டு தணிக்கை அறிக்கை பத்தி எண் 53 ல் தடை எழுப்பப்பட்டள்ளதின்படியும் மேற்படி 12 துப்பரவு பணியாளர்களுக்கு மிகையாக வழங்கப்பட்ட பணப்பலன்களை அன்னார்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தில் இருந்து பிடித்தம் செய்ய இவ்வலுவலக செயல்முறை உத்திரவு நாள் 20.08.2018 ல் உத்திரவிடப்பட்டுள்ளது.தற்போது இவ்வுத்திரவினை எதிர்த்து இந்நகராட்சி துப்பரவு பணியாளர்கள் திரு. டி.சேகர், கே.தண்டபாணி, எம்.கஜேந்திரன், டி.கண்ணியப்பன், எம்.சங்ங்ர் ஆகியோர் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு எண் W.P.No.24562/2018 மற்றும் WMP.No.28595 முதல் 28597/2018 மூலம் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.மேற்படி வழக்கில் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை மற்றும் நகராட்சி ஆணையாளர் நெல்லிக்குப்பம் ஆகியரோரின் சார்பாக ஆஜ்ராக அரசுவழக்கறிஞர் திரு.ஏ.ஜெயப்பிரகாஷ் நாராயணன் அவர்களுக்கு கடிதம் அனுப்பவும் மற்றும் வழக்கு செலவினம் உத்தேசமாக ரூ.25000/– க்கு மன்ற அனுமதி வேண்டியும் மன்றப்பொருள் ஒப்புதலுக்கு.

<u>அலுவலகக்குறிப்பு .</u> மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண் . 3278/2011/எச்1)**

**தீர்மான எண் : 232. <u>அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>மன்ற பொருள்.4.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி குடிநீர் நிதியில் அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் பிரிவு 15ன் கீழ் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் . 14 மேல்நிலை நீர்த் தேக்க தொட்டியின் ஆழ்துளை கிணற்றில் உள்ள நீர் மூழ்கி மோட்டார் பழுதடைந்து விட்டதை புதியதாக 12.50 HP நீர் மூழ்கி மோட்டார் வாங்கி பொருத்தி பயன்பாட்டில் உள்ளதற்கு பட்டியல் தொகை ரூ.55976/– M/s.Santhosh Enterprises , கடலூர் அவர்களுக்கு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது .

அலுவலகக் குறிப்பு: மன்றம் பதிவு செய்யலாம் .

**(ந.க.எண் . 4418/2018/இ1)**

**தீர்மான எண் : 233 . அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டது.**

**<u>மன்றப்பொருள்.5 .</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட திருக்கண்டேஷ்வரம் கிராமம், வார்டு A பிளாக் 17 T.S.No .4/1pt , 4/1B2, 4/2, 5/2, 5/3 இடத்தின் பரப்பு 213879.60 சதுரடியாகும். இவ்விடம் அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவாக அமைந்ததால் மனைப்பிரிவின் உரிமையாளர் திரு .ஷேக்தாவூத் என்பவர் குடியிருப்பு மனைப்பிரிவினை வரன் முறை செய்ய நகர் ஊரமைப்பு ஆணையருக்கு விண்ணப்பம் செய்ததின் பேரில் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் வி.ம. அவர்கள் கொ.ஒ.ம.வ. / ந.ஊ.உ.இ (வி.ம.) எண் R 1052/2018 என எண்ணிட்டு குடியிருப்பு மனைப் பிரிவினை கொள்கையளவில் ஒப்புதல் செய்து இந்நகராட்சிக்கு 12.10.2018ல் வரப்பெற்றுள்ளது . மேற்படி புல எண்ணில் உள்ள மனைப்பிரிவில் உள்ள சாலை மற்றும் பூங்காவினை ரூ.100/– முத்திரை தாளில் தானமாக பெற்றுக் கொள்ளவும், மனுதாரர் தனி மனைக்கு /மொத்த விற்க்கப்படாத மனைக்கு கட்டணங்கள் செலுத்தியதும் அனுமதி வழங்க மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:-</u>**

திருக்கண்டேஷ்வரம் கிராமம், வார்டு A பிளாக் நகரளவு எண்.4/1pt , 4/1B2, 4/2, 5/2, 5/3 ல் பரப்பு 143737 சதுரடி குடியிருப்பு மனைப்பிரிவாக கொள்கையளவில் கொ.ஒ.ம.வ. / ந.ஊ.உ.இ (வி.ம.) எண் R 1052/2018 என எண்ணிட்டு வரப்பெற்றுள்ளது. இதிலுள்ள சாலை மற்றும் பூங்காவினை நகராட்சி ஆணையர் பெயரில் ரூ.100/– முத்திரை தாளில் தானமாக பெற மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. மனுதாரர் தனி மனை / மொத்த விற்கப்படாத மனைக்கு கட்டணங்கள் செலுத்தியதும் மனைக்கு வரன்முறை அனுமதி அளிக்கலாம்.

**ந.க.எண்:- 4326/2018/F1**

**தீர்மான எண் : 234. அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

**<u>மன்றப்பொருள்.6 .</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட மேல்பாதி கிராமம், வார்டு D, பிளாக் 25 T.S.No.18/1,18/2 இடத்தின் பரப்பு 9365400 சதுரடியாகும். இவ்விடம் அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவாக அமைந்ததால் மனைப்பிரிவின் உரிமையாளர் திரு .G . சரவணன் என்பவர் குடியிருப்பு மனைப்பிரிவினை வரன் முறை செய்ய நகர் ஊரமைப்பு ஆணையருக்கு விண்ணப்பம் செய்ததின் பேரில் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் வி.ம. அவர்கள் கொ.ஒ.ம.வ. / ந.ஊ.உ.இ (வி.ம.) எண். R 941/2018 என எண்ணிட்டு குடியிருப்பு மனைப் பிரிவினை கொள்கையளவில் ஒப்புதல் செய்து இந்நகராட்சிக்கு 23.10.2018ல் வரப்பெற்றுள்ளது .மேற்படி குடியிருப்பு மனைப்பிரிவில் உள்ள சாலை மற்றும் பூங்காவினை ரூ.100/– முத்திரை தாளில் தானமாக பெற்றுக் கொள்ளவும், மனுதாரர் கட்டணங்கள் தனி மனை / மொத்த மனைக்கும் செலுத்தியதும் அனுமதி வழங்க மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:-</u>**

மேல்பாதி கிராமம், வார்டு D, பிளாக் 25 நகரளவு எண்.18/1,18/2 ல் பரப்பு 93654 சதுரடி குடியிருப்பு மனைப்பிரிவாக கொள்கையளவில் கொ.ஒ.ம.வ. / ந.ஊ.உ.இ (வி.ம.) எண். R 941/2018 என எண்ணிட்டு வரப்பெற்றுள்ளது. இதிலுள்ள சாலை மற்றும் பூங்காவினை நகராட்சி ஆணையர் பெயரில் ரூ.100/– முத்திரை தாளில் தானமாக பெற மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. மனுதாரருக்கு கட்டணங்கள் தனி மனை / மொத்த மனைக்கு ( விற்கப்படாத ) செலுத்தியதும் மனைக்கு வரன்முறை உத்திரவு அளிக்கலாம்.

**ந.க.எண்:4354/2018/F1**

**<u>தீர்மான எண் : 235. அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>மன்றப்பொருள் .7 .</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி பொது நிதியின் கீழ் மன்ற தீர்மான எண். 188, நாள் 07.09.2018 ன் படி 30.10.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை இறுதி செய்ய மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | <u>பொது நிதி</u><br>மக்கும் குப்பைகளை சிறிது சிறிதாக அறைத்து | 1.80 | **M/s.HAM Industrial Solution , Chennai** | **0**.28% மதிப்பீட்டை விட குறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| | செயல்படுத்த Shreeder Mechine வழங்குதல் பணி | | **M/s. Supreme Industrial Heaters , Chennai** | 5.56% மதிப்பீட்டை விட அதிகம் |

<u>அலுவலகக்குறிப்பு : –</u> வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான 0.**28 %** ஒப்பந்தப்புள்ளிஅ ளித்துள்ள **M/s.HAM Industrial Solution , Chennai** ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

**(ந.க.எண் . 4108/2018/இ1)**

**தீர்மான எண் : 236 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

**<u>மன்றப்பொருள் .8.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் மன்ற தீர்மான எண். 184, நாள் 07.09.2018 ன் படி 30.10.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை இறுதி செய்ய மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | குடிநீர் விநியோகத்திற்கு Liquid Chlorine தருவித்து வழங்குதல் பணி | **2.00** | M/s.அருணாச்சல அசோசியேட் | **0**.36% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | திரு.k.N.முருகன் | 3.94% மதிப்பீட்டை விட அதிகம் |

<u>அலுவலகக்குறிப்பு : –</u> வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான 0.**36 %** ஒப்பந்தப்புள்ளிஅளித்துள்ளM/s.அருணாச்சலஅசோசியேட்ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

**(ந.க.எண் . 4101/2018/இ1)**

**தீர்மான எண் : 237. அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

**<u>மன்றப்பொருள் .9.</u>** தமிழ்நாடு நகர்புற சாலை மேம்பாடு திட்டம் (TURIP) 2018-19 கீழ் நெல்லிக்குப்பம் நகராட்சிக்கு ரூ.300.00 இலட்சத்திற்கு ( TURIF Rs. 114.00 Lakhs+ SFC/CFC Rs.90.00 Lakhs+ SFC Incentive Grant Rs.66.00 Lakhs ULB Rs.30.00 Lakhs வீதம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது) நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல் முறை ந.க.எண். 12981/2017/இ3 நாள். 17.07.2018ல் நிர்வாக அனுமதி மற்றும் நகராட்சி நிர்வாக தலைமை பொறியாளர், சென்னை அவர்களின் தொழில் நுட்ப அனுமதி செயல்முறை ந.க.எண். 20308/2018/DO1 நாள்.20.08.2018ன் படி 04.10.2018 ல் ஒப்பந்துபுள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பட்டுள்ள ஒப்பந்துபுள்ளிகளை இறுதி செய்ய மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | திருக்கண்டேஸ்வரம் மெயின் ரோடு , திருக்கண்டேஸ்வரம் மெயின் ரோடு மற்றும் சுடுகாட்டு சாலை , தனலட்சுமி நகர் மற்றும் ரைஸ்மில் சாலை , நர்மதா நகர் மெயின் ரோடு , விஸ்வநாதபுரம் | 215.00 | M/s. ஜெய் & கோ கடலூர் | **0.04%** மதிப்பீட்டை விட குறைவு |
| | | | M/s. SVT Constructions கடலூர் | **3.03%** மதிப்பீட்டை விட அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | வான்பாக்கம் இணைப்பு சாலை , வார்டு . 7 காமராஜ் நகர் சாலை , வாழப்பட்டு திரொளபதி அம்மன் கோயில் தெரு , சரவணபுரம் வாழப்பட்டு இணைப்பு சாலை , பாபா நகர் , தமிழ் கருமார தெரு , தேவநாதன் நகர் 4வது குறுக்கு தெரு மற்றும் மாருதி நகர் விரிவாக்கம் குறுக்கு தெருவில் தார் சாலை அமைத்தல் பணி , (வார்டு எண். 7,9,14,15,16 மற்றும் 24 ) | | | |

<u>அலுவலகக்குறிப்பு :- 1.</u> வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான 0.04 % ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s. ஜெய் & கோ , கடலூர் ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

2. மேற்படி பணிக்கு தொழில் நுட்ப அனுமதி ரூ .215.00 இலட்சத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது . ஒதுக்கீடு தொகையை விட கூடுதலாக ரூ .5.00 இலட்சம் ஆனதால் கூடுதல் தொகையை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளமன்றம் அனுமதி வழங்கலாம் .

**(ந.க.எண் . 2022/2018/இ1**

**தீர்மான எண் : 238. அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

**<u>மன்றப்பொருள் .10.</u>** தமிழ்நாடு நகர்புற சாலை மேம்பாடு திட்டம் (TURIP) 2018-19 கீழ் நெல்லிக்குப்பம் நகராட்சிக்கு ரூ . 300.00 இலட்சத்திற்கு ( TURIF Rs. 114.00 Lakhs+ SFC/CFC Rs.90.00 Lakhs+ SFC Incentive Grant Rs.66.00 Lakhs ULB Rs.30.00 Lakhs வீதம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது) நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல் முறை ந.க.எண். 12981/2017/இ3 நாள். 17.07.2018ல் நிர்வாக அனுமதி மற்றும் நகராட்சி நிர்வாக தலைமை பொறியாளர், சென்னை அவர்களின் தொழில் நுட்ப அனுமதி செயல்முறை ந.க.எண். 20308/2018/DO1 நாள்.20.08.2018ன் படி 04.10.2018 ல் ஒப்பந்தபுள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பட்டுள்ள ஒப்பந்தபுள்ளிகளை இறுதி செய்ய மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | வான்பாக்கம் சானர் தோப்பு , வாழப்பட்டு அருணாச்சலம் தெரு , மேட்டு தெரு , சோழவல்லி குறுக்கு மெயின் ரோட்டில் 1வது , 2வது மற்றும் 3வது குறுக்கு தெரு , மோரை மேட்டுத் தெருவில் விடுபட்ட பகுதி , வார்டு . 25 காமராஜ் நகர் மெயின் ரோடு மற்றும் கல்கி நகரில் சிமெண்ட் சாலை அமைத்தல் பணி . (வார்டு எண். 2,12,15,20 , 24 மற்றும் 25 ) | 90.00 | M/s. அருணாச்சல அசோசியேட் நெல்லிக்குப்பம் | **4.98%** மதிப்பீட்டை விட குறைவு |
| | | | M/s. NSK Constructions கடலூர் | **12.16%** மதிப்பீட்டை விட அதிகம் |

<u>அலுவலகக்குறிப்பு :- 1.</u> வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டு விலையை விட கூடுதலாக கொடுத்துள்ளனர். ஒப்பந்தபுள்ளி சதவீதத்தை குறைத்து தர கடிதம் அனுப்பியதில் M/s.அருணாச்சல அசோசியேட் , நெல்லிக்குப்பம் என்ற

ஒப்பந்த நிறுவனம் தனது ஒப்பந்தபுள்ளி சதவீதத்தை குறைத்து மதிப்பீட்டை விட 1.50% கூடுதலான விலை விகிதத்தில் செய்ய சம்மதம் தெரிவித்து கடிதம் கொடுத்துள்ளார்.

2. தற்பொழுது மணல் தட்டுபாடு மற்றும் உள்ளூர் சந்தை விலை விகிதத்தை கருத்தில் கொண்டு மறு ஒப்பந்தபுள்ளி கோரும் பட்சத்தில் இதை விட கூடுதலான விலை விகிதத்தில் ஒப்பந்தபுள்ளி வரவாய்ப்பு உள்ளது . எனவே மதிப்பீட்டு தொகையை விட 1.50% கூடுதலான இவரது ஒப்பந்தபுள்ளியை மன்றம் ஏற்கலாம். கூடுதல் செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம் .

**(ந.க.எண் . 2022/2018/இ1**

**தீர்மான எண் : 239. அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

**<u>மன்றப்பொருள் 11.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி கல்வி வரி நிதியின் கீழ் மன்ற தீர்மான எண். 211, நாள் 10.10.2018 ன் படி 30.10.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை இறுதி செய்ய மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 11 நகராட்சி மற்றும் அரசு பள்ளிகளின் கழிவறைகளை தினசரி சுத்தம் செய்து பராமரிக்கும் பணிக்கு | **6.10** | திருமதி. எஸ்.புவனேஸ்வரி | **0.10%** மதிப்பீட்டை விட குறைவு |
| | | | M/s. ஜெய் & கோ கடலூர் | **2.00%** மதிப்பீட்டை விட அதிகம் |

<u>அலுவலகக்குறிப்பு : –</u> வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான 0.10% ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருமதி. எஸ்.புவனேஸ்வரி ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

**(ந.க.எண் . 4107/2018/எச்1)**

**தீர்மான எண் : 240. அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

**<u>மன்றப்பொருள் 12.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி வார்டு எண் . 15 வாழப்பட்டு பள்ளத் தெருவில் தமிழ்நாடு நகர்புற சாலை மேம்பாட்டு திட்டம் 2017–18 ஆம் ஆண்டு திட்டத்தின் கீழ் சிமெண்ட் சாலை அமைக்கும் பணி மேற்கொண்ட போது அப்பகுதி மக்கள் மழைநீர் வடிகால் பணி அமைக்கப்.டட பின்பு தான் சிமெண்ட் சாலை அமைக்கப்பட வேண்டும் என தெரிவித்து பணி செய்யவிடாமல் தடுத்து நிறுத்தினர் . மேற்படி சாலையில் மழை காலங்களில் மழை நீர் அதிகம் தேங்குகின்றன . இதனை வெளியேற்ற மழை நீர் வடிகால் மற்றும் சிறு பாலம் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ . 680000/– ஐ நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்ட்ப்படுகிறது .

அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம் .

**(ந.க.எண் . 4701 /2018/இ1)**

**தீர்மான எண் : 241. அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

**<u>மன்றப்பொருள் 13.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி பேருந்து நிலையத்தில் செயல்பட்டு வரும் கட்டண கழிவறையின் மோட்டார் , தண்ணீர் தொட்டி , கதவுகள் மின் இணைப்புகள் முற்றிலும் சேதம் அடைந்துள்ளது . மேலும் செப்டிக் டேங்க் நிறைந்துள்ளது . இதனை பராமரிப்பு செய்ய தயாரிக்கப்பட்டுள்ள

மதிப்பீடு ரூ . 150000/– ஐ நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம் .

**(ந.க.எண் . 4702/2018/இ1)**

**தீர்மான எண் : 242. அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

**<u>மன்றப்பொருள் 14.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சியில் பணிபுரியும் உள்புறம் , வெளிபுறம் நிரந்திர பணியாளர்கள் மற்றும் தனியார் மூலம் அமர்த்தப்பட்ட பணியாளர்கள் இவர்களின் வருகையை **பயோ மெட்ரிக்** முறையில் பதிய பட வேண்டும் என நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கன் ஆய்வுக் கூட்டத்திவ் தெரிவித்ததின் அடிப்படையில் இந்நகராட்சி அலுவலகத்தில் ஒரு எண்ணிக்கையும் , துப்புரவு பணியாளர்கள் வார்டு அலுவலகங்களில் இரண்டு எண்ணிக்கையும் GSM Based face & finger Based Bio martic Device அமைக்க தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ . 66000/– ஐ நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம் .

**(ந.க.எண் . 4703/2018/இ1)**

**தீர்மான எண் : 243. அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

**<u>மன்றப்பொருள் 15.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சியின் திடக்கழிவு மேலாண்மை பணிக்காக மனித சக்தி வழங்குவதற்கு 09.01.2018 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டுப்பட்டது . நிர்வாக காரணங்களுக்காக 12.01.2018 அன்று ஒப்பந்தபுள்ளி திறக்கப்பட்டது . தொழில் நுட்ப ஒப்பந்தபுள்ளியை உடனடியாக பரிசீலனை செய்து தகுதி வாய்ந்த ஒப்பந்த நிறுவனங்களின் பெயர்களை அறிவிக்க வேண்டும் என ஒப்பந்தபுள்ளி வழங்கிட்ட இரண்டு நிறுவனங்களின் முகவர்கள் மற்றும் சில நபர்கள் வாக்கு வாதம் செய்ததால் ஒப்பந்தபுள்ளி நிபந்தனைகளின் அடிப்படையிலும் மேலும் இரண்டு உறை முறையில் ஒப்பந்தபுள்ளி வழங்காத ஒப்பந்தபுள்ளிகளையும் நிராகரித்து மறு ஒப்பந்தபுள்ளி 31.01.2018 அன்று கோரப்பட்டது . மறு ஒப்பந்தபுள்ளியில் பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளியில் குறைவாக (ஒப்பந்தபுள்ளி ) வழங்கிட்ட தகுதி வாய்ந்த ஒப்பந்த நிறுவனமான M/s. ஜெய் & கோ ,கடலூர் அவர்களுக்கு பணி உத்திரவு 14.02.2018 அன்று வழங்கபட்டது . இந்நிலையில் மறு ஒப்பந்தபுள்ளி கோரியதில் போதிய கால அவகாசம் இல்லை என சென்னை உயர்நீதி மன்றத்தில் The Nellikuppam Agro Engg & service Co-Op Centre Ltd E-2739 Kambar Nagar, Vazhapet, Nellikuppam நிறுவனத்தால் வழக்கு தொடரப்பட்டதால் மேண்மைமிகு சென்னை உயர் நீதி மன்றம் இடைக்கால உத்திரவாக 14.02.2018 அன்று ஒப்பந்தத்தை முடிவு செய்திட வேண்டாம் என உத்திரவிட்டது . எனவே உடனே அன்றைய தேதியிலேயே பணியை தற்காலிகமாக நிறுத்தி வைக்க M/s. ஜெய் & கோ ,கடலூர் அவர்களுக்கு அறிவிப்பு வழங்கப்பட்டது . இவ்வழக்கு 13.06.2018 அன்று மேண்மைமிகு சென்னை உயர் நீதி மன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டு , ஒப்பந்தத்தை முடிவு செய்து நகராட்சி பணி உத்திரவு வழங்கலாம் என உத்திரவிட்டு தீர்ப்பளித்தது . இதன் அடிப்படையில் பொது சுகாதாரத்தை கருத்தில் கொண்டு மனித சக்தி வழங்குதல் பணிக்கு 15.06.2018 அன்று பணி துவங்கிட மேற்கண்ட ஒப்பந்த நிறுவனத்திற்கு நகராட்சியால் அறிவிப்பு வழங்கப்பட்டது . 16.06.2018 அன்று முதல் மனித சக்தி வழங்குதல் செயல்பாட்டிற்கு வந்தது . 16.06.2018 தேதியிலிருந்து ஒரு வருட காலத்திற்கு தாங்கள் வழங்கிய ஒப்பந்த விலைவிகிதத்தில் மேற்கண்ட M/s. ஜெய் & கோ ,கடலூர் நிறுவனம் மனித சக்தி வழங்கிட சம்மதம் தெரிவித்து கடிதம் கொடுத்துள்ளதாலும் , ஒரு வருட காலத்திற்கான ஒப்பந்தம் 16.06.2018 முதல் துவங்கிய காரணத்தாலும் , ஒப்பந்த காலத்தினை இந்நகராட்சி மேற்கண்ட நிறுவனத்துடன் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்த உடன்படிக்கையின் படி 14.02.2019 முடிவடைவதை நீட்டித்து 15.06.2019 வரை

மனித சக்தியை வழங்கிடவும் அதற்காக மேற்கண்ட நிறுவனத்துடன் Supplimental உடன்படிக்கை செய்து கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம் .

**(ந.க.எண் . 3705/2018/இ1)**

**தீர்மான எண் : 244. அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

**மன்றப்பொருள் 16.** நெல்லிக்குப்பம் நகராட்சி அலுவலக பின்புறம் சத்துணவு கூடம் அருகில் அமைந்துள்ள மின் மோட்டார்க்கு செல்லும் EB மின் கம்பியின் மீது அருகில் அமைந்துள்ள தூங்கு மூஞ்சி மரத்தின் கிளைகள் உராய்வதினால் அடிக்கடி மின் தடை ஏற்படுகிறது . எனவே இதனை வெட்டி அப்புறப்படுத்தவும் JCB கொண்டு அலுவலக வளாகத்தில் வளர்ந்துள்ள புதர்களை அகற்றவும் தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.20000/– க்கும் பணியை ஒப்படைப்பு பணியாக இந் நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு.N .சந்திரசேகர் பரிமளா மூலம் மதிப்பீட்டு விலை விகிதத்தில் மேற்கொள்ளவும் செலவை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்ட்ப்படுகிறது .

அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம் .

**(ந.க.எண் . 4724/2018/இ1)**

**தீர்மான எண் : 245. அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

**மன்றப்பொருள் 17.** நெல்லிக்குப்பம் நகராட்சி திருக்கண்டேஸ்வரம் மற்றும் வாழப்பட்டு பகுதியில் தமிழ் நாடு மின்சார வாரியத்தின் மூலம் EB Cable பதிக்க அனுமதி வழங்கப்பட்டு சாலை பராமரிப்பு கட்டணமாக ரூ.60000/– மின்சார வாரியத்திடம் பெறப்பட்டுள்ளது . மேற்படி இடத்தில் பணி முடிக்கப்பட்டது . இந்த இடத்தில் பராமரிப்பு பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.20000/– க்கும் பணியை ஒப்படைப்பு பணியாக இந் நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திருமதி.s.பரிமளா மூலம் மேற்கொள்ளவும் செலவை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்ட்ப்படுகிறது .

அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம் .

**(ந.க.எண் . 4725/2018/இ1)**

**தீர்மான எண் : 246. அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

**மன்றப்பொருள் 18.** நெல்லிக்குப்பம் நகராட்சி அலுவலக முன்புறம் உள்ள பெயர் பலகை பொது மக்கள் எளிதில் பார்க்க இயலாத வகையில் உள்ளது . இதனை கிரைனைட் டைல்ஸ் கொண்டு பார்வையில் படும் வகையில் சிறப்பாக அமைக்கவும் Stainless Steel Lettering பதிக்க தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.120000/– ஐ நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்ட்ப்படுகிறது .

அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம் .

**(ந.க.எண் . 4726/2018/இ1)**

**தீர்மான எண் : 247. அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

**மன்றப்பொருள் 19.** நெல்லிக்குப்பம் நகராட்சி வார்டு எண் . 25 காமராஜ் நகர் சுடுகாட்டு சாலை மண் சாலையாக உள்ளது . மழை காலங்களில் மழை நீர் தேங்கி பொது மக்களுக்கு இடையூராக உள்ளது . இதனை சிமெண்ட் சாலை அமைத்து தர பொது மக்கள் கோரியுள்ளனர் . சிமெண்ட் சாலை அமைக்க தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ . 700000/– ஐ நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்ட்ப்படுகிறது .

அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம் .

**(ந.க.எண் . 4727/2018/இ1)**

**தீர்மான எண் : 248. அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

**மன்றப்பொருள் 20.** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 13 மேல்நிலை தண்ணீர் தொட்டிகளும் 25 எண்ணிக்கை ஆழ்துளை கிணறுகளுடன் கூடிய மின் மோட்டார்களும் , 24 சிறு மின்விசை பம்புகளும் உள்ளன. இதன் மூலம் தினந்தேறும் மோட்டார் பம்புகளை இயக்கி நகரில் காலை,

மாலை இரு வேலைகளிலும் குடிநீர் விநியோகம் பொதுமக்களுக்கு சீரான முறையில் தங்கு தடையின்றி செய்யப்பட்டு வருகிறது. தற்சமயம் இந்நகராட்சியில் நீர்தேக்க தண்ணீர் தொட்டி காவலர் 5 பேர் மின் கம்பியாளர்–1 நபரைக் கொண்டு தினந்தோறும் மோட்டார் பம்புகளை இயக்கி மேல்நிலை தண்ணீர் தொட்டிகளில் தண்ணீர் நிரப்பி குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்தபணிக்காக ஆட்கள் பற்றாகுறையாக உள்ளது மேலும் நகரில் உள்ள 48 கிலோ மிட்டர் பகிர்மான குழாய்களில் ஏற்படும் அடைப்பு மற்றும் உடைப்புகளை சரிசெய்யும் மின் மோட்டார் பம்புகளில் ஏற்படும் பழுதுகளை சரி செய்யவும், மோட்டார் ஸ்டாட்டர்களில் ஏற்படும் பழுதுகளையும் மின் பழுதுகளையும் உடனுக்குடன் சரிசெய்யவும் மேலும் குடிநீர் நீர்தேக்க தண்ணீர் தொட்டிகளை சுத்தம் செய்யவும் மேலும் குடிநீர் பராமரிப்பு பணிகளை உடனுக்குடன் செய்யவும் போதிய பணி ஆட்கள் குடிநீர் பிரிவில் இல்லை .இதனால் குடிநீர் விநியோகம் பாதிக்கும் நிலையில் உள்ளது. எனவே குடிநீர் விநியோக அவசரம் அவசியம் கருதியும் பொதுமக்கள் நலன்கருதியும் தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரு. 9,00,000/–ஐ செலவை குடிநீர் விநியோக நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு ;- மன்றம் அனுமதிக்கலாம்
(ந.க.எண். 4728 /2018/இ1)
**தீர்மான எண் : 249. அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

**<u>மன்றப்பொருள் 21.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் . 16 ஜீவா நகர் பாட்டையில் திரு. சௌந்தர் என்பவர் நகராட்சி இடத்தை ஆக்கீரமைப்பு செய்து வீடு கட்டியிருந்தார் . மேற்படி வீடு நகராட்சி நிர்வாகத்தால் 2006 ஆண்டு இடிக்கப்பட்டுவிட்டது . இடிக்கப்பட்ட வீட்டின் சொத்துவரி நீக்கம் செய்யப்பட்டது . ஆனால் குடிநீர் இணைப்பு வரி இந்த வருடம் (2018) வரை நீக்கம் செய்யப்படவில்லை . குடிநீர் இணைப்பு எண் . 094/1688 ரூ.6273/– ( 2006–07 முதல் 2018–19 வரை ) நிலுவையில் உள்ளது . எனவே குடிநீர் இணைப்பு வரி மற்றும் நிலுவை தொகையினை நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .
அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம் .
**(ந.க.எண் . 4729/2018/இ1)**
**தீர்மான எண் : 250. அலுவலக குறிப்பினை ஏற்று குடிநீர் கட்டண நிலுவைத் தொகையினை நீக்கம் செய்திட அனுமதிக்கப்பட்டது.**

**<u>மன்றப்பொருள் 22.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி அலுவலக உபயோகத்திற்கு பயன்படுத்தி வரும் 62.50 KVA ஜெனரேட்டர் பேனல் போர்டு ( ஆட்டோமெட்டிக்) பழுது ஏற்பட்டுள்ளது . இதனால் ஜெனரேட்டரை இயக்க முடியவில்லை . இதனை சரி செய்யவும் மேலும் ஜெனரேட்டர் ஆயில் சர்வீஸ் செய்யவும் தோராய செலவினம் ரூ.20000/– த்தை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் வரும் “கஜா” புயலின் அவசர அவசியம் கருதி ஜெனரேட்டர் அங்கீகாரம் பெற்ற டீலர் வசம் விலைபுள்ளி கோர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .
அலுவலகக் குறிப்பு:1. மன்றம் அனுமதிக்கலாம் .
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம் .
**(ந.க.எண் . 4729/2018/இ1)**
**தீர்மான எண் : 251. அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது.**

**<u>மன்றப்பொருள் 23.</u>** ஆயுத பூஜையை (18.10.2018) முன்னிட்டு ‘‘தொழில் மலர் 2018 ‘‘ நெல்லிக்குப்பம் நகராட்சியில் 2017–18 மற்றும் 2018–19 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட , மேற்கொள்ளப்பட இருக்கும் திட்ட பணிகளின் விவரத்தை கடலூர் , மாவட்ட ஆட்சித் தலைவர் ந.க.எண். 115/செமதொ/2018 நாள்.06.08.2018ன் படி விளம்பரம் செய்ததில் Express Publications (Madurai) Limited (தினமணி)

நாளிதழ்க்கு விளம்பரத் தொகை ரூ . 10500/— நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது .

அலுவலகக்குறிப்பு:— மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண் . 4409/2018/இ1)**

**தீர்மான எண் : 252. அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

**மன்றப்பொருள் 24.** நெல்லிக்குப்பம் நகராட்சி 30 வார்டுகளில் தனியார் மூலம் — சமுக நல சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் நிலையம் அமைக்க நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் ஆய்வு கூட்டத்தில் தெரிவித்ததின் அடிப்டையில் 30 வார்டுகளிலும் இடம் தேர்வு செய்யப்பட்டது . இந்த இடங்களில் தனியார் மூலம் அவர்களது சொந்த செலவில் WATER ATM அமைத்து அதனை 10 ஆண்டுகள் பராமரிப்பு செலவு மேற்கொள்ள வேண்டும் . இவர்கள் 20 லிட்டர் ரூ. 7/— க்கு பொது மக்களுக்கு விநியோகம் செய்து அதில் ரூ. 1/— நகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டும் என நிபந்தனை அடிப்படையில் பணி மேற்கொள்ளபட வேண்டும் . முதற்கட்டமாக இரண்டு இடங்களில் WATER ATM அமைக்க ( Expression of Interest EOI ) விருப்பம் தெரிவித்தல் குறித்த அறிவிப்பு கேட்க 13.10.2018 அன்று மாநில அளவில் தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழி விளம்பரம் செய்த வகையில் இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புதுறை , சென்னை – 9 அவர்கள் மூலமாக கொடுக்கப்பட்டு என்த்ரால் கம்யூனிகேசன்ஸ் பிரைவேட் லிமிடெட் (Enthrall Communications Pvt Ltd) , சென்னை அவர்களுக்கு ரூ.15078/— பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் 4181/2018/இ1)

**தீர்மான எண் : 253. அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

தனி அலுவலர்,
நெல்லிக்குப்பம் நகராட்சி.